# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1783/27 - 2012 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2012.11.09

*1783/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**சுருட்டு உற்பத்தித் தொழில் தொடர்பான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு சுருட்டு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது. இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறாக சபையின் முடிபுகளை வேறுபடுத்த உத்தேசிக்கின்றதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வீ. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
சுருட்டு உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, நவெம்பர் 06.

**அட்டவணை**

சுருட்டு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1946 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதியன்று வெளிவந்த 9,585 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறான 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள முடிபுகள் அவ்வட்டவணையின் I ஆம் பாகத்தில் ஏற்கனவேயுள்ள பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம் மேலும் பின்வருமாறு வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**"I ஆம் பாகம்**

**துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த கூலி வீதங்கள்**

சுருட்டு சுற்றுவதற்கு (உட்புகையிலையைச் சுத்தஞ் செய்தல், சுற்றுதற்குக் காப்பிலையைத் தயார் செய்தல், துண்டுப் புகையிலையை நிரப்புதலுடன் சுற்றுதற்கு உட்புகையிலையைத் தயார் செய்தல், சுற்றிய சுருட்டுக்களை நூலினாற் கட்டுதல், பத்துச் சுருட்டுக்கள் கொண்ட கட்டுகளாகச் சுருட்டுக்களைக் கட்டுதல் ஆகியன உட்பட) துண்டு வேலைக்குரிய (திரட்டிய) ஆகக் குறைந்த கூலி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

1000 சுருட்டுகளுக்கு - ரூபா 595.00"

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தீப்பெட்டி உற்பத்தித் தொழில் தொடர்பான சம்பளச் சபை

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறு அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தமது முடிபுகளை வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு, அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றைக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

வீ. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, நவெம்பர் 06.

### அட்டவணை

தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1947 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய 9708 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும் 2010- ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணையின் II ஆம் நிரலுக்கு புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"பகுதி II

**நேர வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதம்**

1 ஆம் நிரலிற் குறிக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கு இயைபுடைய சாதாரண வேலை நாளுக்குரிய நேர வேலைக்கான கீழெல்லைச் சம்பள வீதம் II ஆம் நிரலில் அந்தந்த தரத்திற்கு நேரே குறிக்கப்பட்டுள்ள வீத அளவினதாக இருத்தல் வேண்டும்.

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| **தொழிலாளர் வகுப்பு** | **நாளுக்குரிய வீதம்** |
| **தரம்** I | ரூபா சதம் |
| மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகள் வெட்டுதல், மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகளை உரித்தல், விளிம்புகள், வெளிப்பெட்டிகள் அருகுகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷின் டிரைவரால் சுத்திகளையும் ஆயுதங்களையும் தீட்டுதல், மெஷின் டிரைவரால் சட்டங்களைக் குச்சால் நிரப்புதல், மெஷின் டிரைவரால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல், மெஷின் டிரைவரால் ஓரங்களுக்கு மருந்து பூசுதல், நெருப்புக் குச்சி நுனிக்குப் பூசும் மருந்து கலத்தல், மெஷின் டிரைவரால் கடதாசிகளை நடாக்களாக வெட்டுதல், ஓவசியரின் அல்லது கங்காணியின் வேலை, மெஷின் டிரைவரால் பெட்டி நிரப்புதல். | 380.00 |

| தொழிலாளர் வகுப்பு | நாளுக்குரிய வீதம் |
|---|---|
| ***தரம்*** II | |
| | ரூபா சதம் |
| கையால் குறுக்கே துண்டு துண்டுகளாக வெட்டுதல், மெஷின் டிரைவரால் குறுக்கே துண்டு துண்டுகளாக வெட்டுதல், தகடுகள் மட்டுப்படுத்தல், வெட்டுக்கருவியால் வெளிப்பெட்டி அருகுகள், விளிம்புகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷினால் உட்பெட்டி செய்தல், உதவி செய்பவரால் மெஷினை உபயோகித்துக் கத்திகளையும், ஆயுதங்களையும் தீட்டுதல், கையால் வெண் மெழுகு பூசுதல், சட்டங்களிலிருந்து குச்சிகளைக் காலியாக்குதல், பெட்டியின் ஓரங்களுக்கு மருந்து பூசுதல், நிரப்பிய பெட்டிகளைச் சரிபார்த்தல், மெஷின் டிரைவரால் கடுதாசி நடா இடுதல், பெட்டிகளின் ஓரங்களுக்குப் பூசுவதற்கு மருந்து கலத்தல், மெஷினால் வெளிப்பெட்டி செய்தல், பெட்டிகளை நிரப்புவதற்கு மெஷினால் பெட்டிகளை எடுத்துதவுதல், கையால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல். | 365.00 |
| ***தரம்*** III | |
| மேலே I ஆம் அல்லது II ஆம் தரங்களில் குறிக்கப்படாத காவற்காரரின் வேலை தவிர்ந்த (தீப்பெட்டித் தொழிலிலுள்ள) தொழிலாளர் யாவரினதும் வேலை. | 350.00 |
| ***தரம்*** IV | |
| காவற்காரரின் வேலை. | 380.00” |

*11- 866/1*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.